**தலைப்பு - 265, மாவட்ட செயலகம், மன்னார்**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013**

**1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான பணிகள்**

(i) பின்வரும் சேவைகளை வழங்குதல் அல்லது இச் சேவைகளை தொடர்புடைய நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு ஒருங்கிணைப்பினை வழங்குதல்.

- ✓ கடவுச்சீட்டுக்கள், தேசிய அடையாள அட்டைகள், வியாபார பதிவுச் சான்றிதழ்கள், இறப்பு, பிறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ்கள், மோட்டார் வாகன வருமான அனுமதிப்பத்திரங்கள் போன்றவற்றை வழங்குதல்.
- ✓ வாக்காளர் பதிவேடுகளை பராமரித்தலும் வழங்குதலும்.
- ✓ காணி உத்தரவுப் பத்திரங்கள், உறுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் காணி பிரச்சினைகளை தீர்த்து வைத்தல்.
- ✓ மாவட்டத்திலுள்ள முதியோர்கள் மற்றும் வலதுகுறைந்தோர்களிற்கு மாதாந்த உதவு தொகைகளை வழங்குதல்.
- ✓ மக்களின் உளச் சுகாதாரத்தினை மேம்படுத்துவதற்காக செயற்பாடுகளை ஒழுங்குசெய்தல். (மதியுரை)
- ✓ வேலையற்ற குழுக்கள் மற்றும் பெண்கள் தலைவர்களாக உள்ள குடும்பங்களை ஊக்கப்படுத்தி பயிற்றுவித்தல்.

(ii) ஒட்டுமொத்த குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக சிறந்த நிதிக் கொடுக்கல்வாங்கல் முறைமையினை அமுல்படுத்தி பேணிவருதல்.

(iii) மாவட்டத்திலுள்ள சமூகங்களின் கலை, கலாச்சாரம் மற்றும் விழுமியங்களை ஊக்கப்படுத்தி தூண்டுவதற்காக செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்.

(iv) மாவட்டத்திலுள்ள வளங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு திட்டத்தினை வடிவமைத்தல்.

(v) அனர்த்தங்களிலிருந்து பொது மக்களை பாதுகாத்தல்.

(vi) மாவட்டத்தின் அடிப்படை புள்ளிவிபரங்களை சேகரித்து பராமரித்தல்.

(vii) பிரதேச நிலையான அபிவிருத்தியினை பலப்படுத்தல்

**1.2 மாவட்ட செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்**

(அ) மன்னார்
(ஆ) நானாட்டான்
(இ) முசலி
(ஈ) மாந்தை மேற்கு
(உ) மடு

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

மன்னார் மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப்பதிவேடுகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய வருமானக் கணக்குகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 16 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்குகள், இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்ப்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

மன்னார் மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மன்னார் மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இந்த அறிக்கையின் (அ) இலிருந்து (ஊ) வரையான பொது அவதானிப்புக்களையும் 1.6 இலிருந்து 1.12 வரையான பந்திகளில் காணப்படுகின்ற ஏனைய பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களையும் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்படுகின்றது.

**(அ) கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகளைப் பேணாமை**

மாவட்ட செயலகம் பின்வரும் ஏடுகளைப் பேணியிருக்காத அதேநேரம் குறித்த சில ஏனைய பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு தெரிவுச் செவ்வையின்போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| அடியிதழ் புத்தகங்கள் பதிவேடு | நி.பி. 341 | பராமரிக்கப்ப டவில்லை. |
| காசோலைகளை தபாலிடுதல் பதிவேடு | நி.பி. 388 | -மேற்படி- |
| செய்முறை விளக்கங்கள் பதிவேடு | நி.பி. 445 | -மேற்படி- |
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | -மேற்படி- |

**(ஆ) கணக்காய்விற்கான சான்றின்மை**

கணக்காய்விற்குக் கிடைக்கக்கூடியதாகவிருந்த தகவல்களின் படி மாவட்டச் செயலகத்தின் ரூபா 147,253,054 பெறுமதியான 372 உறுதிச்சீட்டுக்கள் காணாமல் போயிருந்தமை தொடர்பில் நிதிப்பிரமாணம் 272(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(i) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

மன்னார் மாவட்ட செயலகத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த நிதி ஏற்பாடு ரூபா 167,953,792 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 167,283,653 பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆதலால் மாவட்ட செயலகத்தின் தேறிய சேமிப்பு ரூபா 670,139 அல்லது 0.4 சதவீதமாக இருந்தது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு<br>தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | உள்ளவாறு சேமிப்பு | மொத்த தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | (%) |
| மீண்டுவரும் | 145,253,792 | 144,978,611 | 275,181 | 0.2 |
| மூலதனம் | 22,700,000 | 22,305,042 | 394,958 | 1.7 |
| **மொத்தம்** | **167,953,792** | **167,283,653** | **670,139** | **0.4** |

**(ii) பாதீட்டு முரண்**

நிதிப்பிரமாணம் 94 இன் படி, வருடாந்த மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடுகள் காணப்பட்டால் அன்றி செலவினமொன்றோ அல்லது கடப்பாடொன்றோ மேற்கொள்ளப்படுதல் கூடாது. எவ்வாறாயினும், வருடாந்த மதிப்பீட்டிலுள்ள நிதி ஏற்பாட்டிற்கு மேலாக 08 பொறுப்புக்கள் தொடர்பில் ரூபா 1,593,836 கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன.

**(iii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு கருமங்களுக்காக 17 அமைச்சுக்கள் மற்றும் 14 திணைக்களங்களிடமிருந்து முறையே ரூபா 223,124,234 மற்றும் ரூபா 454,564,490 அடங்கலாக ரூபா 677,688,724 கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடு பெறப்பட்டிருந்ததுடன் அதில் முறையே ரூபா 212,071,126 மற்றும் ரூபா 434,874,540 அடங்கலாக ரூபா 646,945,666 பயன்படுத்தப்பட்டது. இதன்படி, முறையே ரூபா 11,053,108 மற்றும் ரூபா 19,689,950 அடங்கலாக ரூபா 30,743,058 கூட்டுமொத்தமான அல்லது 5 சதவீத மற்றும் 4.3 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் கணக்கு தொடர்பில் பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ள படியானது | இழிவு எல்லை | உள்ள படியானது | உச்ச எல்லை | உள்ள படியானது |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 26501 | 12,000,000 | 7,630,897 | 6,000,000 | 7,846,179 | 50,000,000 | 36,160,294 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

2013 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு அறவிடப்படாது நிலுவையாக காணப்பட்ட கடன் மீதிகள் ரூபா 295,926 ஆகும். அதில் முறையே 1992, 1996 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் பதவி வறிதாக்கப்பட்ட 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 71,303 தொகை, 2008 ஆம் ஆண்டில் பதவி நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 31,305 கடன் மீதி, 1999 ஆம் ஆண்டில் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 56,408 தொகை மற்றும் 1998 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் மரணித்த 02 உத்தியோகத்தர்களுடன் தொடர்புடைய ரூபா 136,910 மொத்தமான மீதி என்பன உள்ளடங்கியிருந்தன.

**(உ) கட்டுநிதிக் கணக்குகள்**

----------------------------------------

மாவட்ட செயலகத்தில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 7002/0/0/283/13 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் ரூபா 79,500 தொகையான செலவு மீதி காணப்பட்டது. இருப்பினும், திறைசேரிப் புத்தகத்தின் படி இம் மீதி ரூபா 15,420,500 ஆகக் காணப்பட்டது. வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் குறித்த நோக்க முற்பணங்கள் அது வழங்கப்பட்ட நோக்கங்கள் முடிவுற்ற உடன் மீளளிக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 527,450 தொகையான முற்பணங்கள் 26 முதல் 161 நாட்கள் வீச்சிலான தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன.

(ii) ஆறு சந்தர்ப்பங்களில், ரூபா 84,000 தொகையான முற்பணங்கள் குறித்த நோக்கத்தின் உண்மையான செலவினத்தை மதிப்பீடு செய்யாது வழங்கப்பட்டிருந்தன. அதன் விளைவாக, 46 சதவீதம் முதல் 73 சதவீதம் வரையான வீச்சிலமைந்த ரூபா 45,918 முற்பணங்கள் நீண்ட தாமதத்துடன் காசாக தீர்க்கப்பட்டிருந்தன.

(iii) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம், முன்னைய முற்பணங்களை தீர்ப்பதற்கு முன்னர் எவ்வித புதிய முற்பணங்களும் வழங்கப்படக் கூடாது. இருப்பினும், நிதிப் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக முன்னைய முற்பணங்கள் தீர்க்கப்படாது 13 சந்தர்ப்பங்களில் ரூபா 114,000 முற்பணங்கள் தொடர்ச்சியாக செலுத்தப்பட்டிருந்தது.

(iv) 2012 நவம்பர் 20 ஆந் திகதிய 5/2012 ஆம் இலக்க திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கையின் படி, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாவட்டச் செயலகத்தினதும் பிரதேச செயலகங்களினதும் கணக்குகளை மூடுவதற்காக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) பொதுவைப்பு கணக்கு**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் பொதுவைப்பு கணக்கு மீதி ரூபா 52,679,435 ஆனதுடன் அவற்றின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| 6003/0/0/41 | 52,679,436 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இரண்டு ஆண்டுகளிற்கு மேல் பழமைவாய்ந்த ரூபா 6,482,792 தொகையான வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பல்வேறு நோக்கங்களிற்காக வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 18,126,213 தொகை 2014 யூலை 31 வரை குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) 2011 முதல் 2013 வரையான காலத்தில் வீதி அனுமதிப்பத்திரங்களை வழங்கியமையால் பெறப்பட்ட ரூபா 1,766,601 தொகை தொடர்புடைய நிறுவனங்களிற்கு அனுப்பிவைக்கப்படாது 2014 யூலை 31 வரை பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

## 1.6 கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 1.6.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதி பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று 2014 யூலை 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுப் பாதீடு 2014 யூலை 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.6.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமொன்றும் கணக்காய்வு திட்டமொன்றும் 2013 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்படாதிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவுமில்லை.

### 1.6.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபைகளை செயற்படுத்தல்

2000 யூன் 12 ஆந் திகதிய ஐஏஐ/2000/1 ஆம் இலக்க திறைசேரிச் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை காலாண்டிற்கு ஒரு முறையேனும் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் ஒரேயொரு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

## 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது மற்றும் குறைவாகப் பயன்படுத்தியிருந்த சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன.

| சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்திய காலப்பகுதி |
|---|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 06 | 02 ஆண்டுகள் |
| மோட்டார் சைக்கிள் | 01 | 02 ஆண்டுகள் |
| காற்றுச் சீராக்கிகள் | 02 | 02 ஆண்டுகள் |
| தொலைக்காட்சிப் பெட்டிகள் | 02 | 02 ஆண்டுகள் |
| மடிக் கணனிகள் | 02 | 02 ஆண்டுகள் |
| தூசு சுத்திகரிப்பான் | 01 | 02 ஆண்டுகள் |
| நீரிரைக்கும் இயந்திரம் | 01 | 02 ஆண்டுகள் |

**(ஆ) வருடாந்த கணப்பீட்டுச் சபையினை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2013 ஆம் ஆண்டிற்காக மாவட்டச் செயலகமும் 05 பிரதேச செயலகங்களும் கணிப்பீட்டுச் சபைகளை நடாத்தி அதன் மீதான அறிக்கைகளை கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருந்தன. முன்னைய ஆண்டிற்கான கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள் 2013 யூலை 26 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந்த அறிக்கைகள் மற்றும் பொருளிருப்புப் பதிவேடுகளின் பரிசோதனைகளில் பின்வரும் விடயங்கள் வெளிப்பட்டன.

(i) நிதிப்பிரமாணம் 758(2) இன் படி, கட்டிடங்களிலுள்ள உருப்படிகள் சிலவற்றை இருப்பு எடுப்பவர் தெரிவுசெய்து அவை இருப்புப் பதிவேடுகளில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளமை குறித்து அவர் தனிப்பட்ட முறையில் திருப்தியடைதல் வேண்டும். இருப்பினும், அது அவ்வாறு சேய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மன்னார், முசலி, மடு மற்றும் மாந்தை பிரதேச செயலகங்களின் கணிப்பீட்டுச் சபை அறிக்கைகளில் இனங்காணப்பட்டிருந்த பயன்படுத்த முடியாத களஞ்சிய விடயங்கள் 173, 91, 231 மற்றும் 122 வகைகள் தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினர்களிற்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்**

(i) மேலதிக மாவட்டச் செயலாளரின் உத்தியோகபூர்வ விடுதி தாபன விதிக்கோவையிலுள்ள XIX ஆம் அத்தியாயத்தின் 6.2 ஆம் பிரிவிற்கு முரணாக 2013 சனவரி முதல் பிரதேச வன இலாகா உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் வாடகையானது தாபன விதிக்கோவையிலுள்ள XIX ஆம் அத்தியாயத்தின் 5.7 ஆம் பிரிவின் பிரகாரம் பெறப்படாமல் முறையற்ற விதத்தில் வன இலாகா உத்தியோகத்தரின் அடிப்படை சம்பளத்தில் அத்திகதியிலிருந்து அறவிடப்பட்டிருந்தது. மேலும், 2014 ஆகஸ்ட் இல் உள்ளவாறான ரூபா 34,702 வாடகைகள் அறவிடப்பட்டிருக்க வேண்டும்.

(ii) மாவட்டச் செயலகம் முறையற்ற விதத்தில் ஆறு வாகனங்களை வெளித்தரப்பினருக்கு விடுவித்திருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பதிவு இலக்கம் | வாகன வகை | வெளித்தரப்பின் பெயர் |
| --- | --- | --- |
| 53-5435 | பிக்-கப் | நகர சபை, மன்னார் |
| 52-5084 | பிக்-கப் | இளைஞர் மன்றம், மன்னார் |
| WP-JQ-1512 | டொயொடா-ஹைலக்ஸ் | கைத்தொழில் அபிவிருத்திச் சபை, மன்னார். |
| WP-JQ-1477 | டொயொடா-ஹைலக்ஸ் | விவிசாய திணைக்களம் |
| WP-HM-6896 | இசுசு-ரீஎவ்எஸ்எஸ்4எச் | கமத்தொழில் அபிவிருத்தி நிலையம், மன்னார் |
| NP-MV-0560 | மோட்டார் சைக்கிள் | பிரதேச சபை மன்னார் |

**1.8 இணக்கமின்மை**

(அ) **சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வுசெய்து கீழே காட்டப்பட்டுள்ளன.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணக்கமின்மை** |
| --- | --- | --- | --- |
| (i) | நிப்பிரமாணங்கள் 139(1) மற்றும் 257 | 773,634 | அதிகாரமுள்ள உத்தியோகத்தர் ஒருவரால் சான்றுறுதிப்படுத்தப்பட்ட கொடுப்பனவு உறுதிச் சிட்டைகளினூடாக மாத்திரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ரூபா 773,634 தொகையான கொடுப்பனவுகள் 14 சான்றுறுதிப்படுத்தப்படாத கொடுப்பனவு உறுதிச்சிட்டைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (ii) | நிப்பிரமாணங்கள் 206(1), (4) | 197,768 | வைப்புக் கணக்கிலிருந்து மேற்கொள்ளப் படுகின்ற கொடுப்பனவுகளிற்கான ஒவ்வொரு கொடுப்பனவு உறுதிச்சிட்டைகளும் இரண்டு உத்தியோகத்தாகளினால் சான்றுறுதிப் படுத்தப்பட வேண்டிய போதிலும், இந்த ஏற்பாட்டிற்கு முரணாக 07 கொடுப்பனவு உறுதிச்சிட்டைகள் மூலம் ரூபா 197,768 கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |
| (iii) | நிப்பிரமாணங்கள் 237(ஆ) | 100,090 | மூன்று பிரதேச செயலகங்களால் 09 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தனவா என்பதனை உறுதிப்படுத்துவதற்கு களஞ்சிய |

| | | | |
|---|---|---|---|
| | | | சான்றிதழ்கள் கிடைக்கப்பெறவில்லை. இருப்பினும், அதற்காக ரூபா 100,090 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (iv) | நிப்பிரமாணங்கள் 880 மற்றும் 881 | 428,500 | மாவட்டச் செயலகத்திலும் 05 பிரதேச செயலகங்களிலும் பணிபுரியும் 43 உத்தியோகத்தர்கள் மற்றும் 03 சாரதி களிடமிருந்து பிணைகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கவில்லை. |
| (v) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | - | வாகனங்களின் எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கு ஒரு முறையும் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மாவட்டச் செயலகத்தினதும் 05 பிரதேச செயலகங்களினதும் கீழுள்ள அநேக வாகனங்களில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தி | 61,113 | மாவட்டச் செயலகத்திற்கு உரித்தான வாகனமொன்றின் 2013 யூலை முதல் திசெம்பர் மாதம் வரைக்குமான மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (vii) | 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய 28 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2011 சனவரி 24 ஆந் திகதிய எச்ஏ/ஏடீடீ/எஸ்ஈசீ/17/பொது ஆம் இலக்க பொது நிர்வாக அமைச்சுச் செயலாளரின் கடிதம் | - | அமைய அல்லது பதிற்கடமை அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கு பொது நிர்வாக அமைச்சின் முன் அங்கீகாரம் தேவைப்படுகிறது. எவ்வாறாயினும், இப் பிரமாணத்திற்கு முரணாக மடு பிரதேச செயலாளரால் 2009 பெப்ரவரி 18 ஆந் திகதி பதிற்கடமை அடிப்படையில் தொழிலாளர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டு கணக்காய்வுத் திகதியான 2014 யூலை 31 ஆந் திகதி வரை தொடர்ந்தும் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. |

**1.9 ஒப்பந்த நிர்வாகம்**

மீளாய்வாண்டில் ரூபா 3,200,000 செலவில் 32 விவசாயக் கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களக் கொள்வனவுச் சபையிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை தவிர்ப்பதற்காக 32 கிணறுகளினதும் ஒட்டுமொத்த நிர்மாண வேலைகள் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு இரண்டு கிராமிய அபிவிருத்திச் சங்கங்களிற்கு கையளிக்கப்பட்டிருந்தன.

(ii) சாத்தியவள ஆய்வினை மேற்கொள்ளாது விவசாயக் கிணறுகளின் நிர்மாணத்திற்கான மதிப்பீடுகளை பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் தயாரித்திருந்தார். அதன் விளைவாக, அக் கிணறுகளில் நீர் காணப்படாமையால் பொது மக்கள் அவற்றை பயன்படுத்தியிருக்கவில்லை. அதன்காரணமாக, அக் கிணறுகளை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 32,000 தொகை பயனற்ற செலவினமாகியிருந்தது.

**1.10 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

**கொள்வனவு வழிகாட்டல்களிலிருந்து விலகுதல்**

(i) கொள்வனவு வழிகாட்டல்களின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் திறந்த போட்டி கேள்வி கோரல்களை பின்பற்றாதும் கொள்வனவு வழிகாட்டல்களின் 2.7.7 மற்றும் 2.8.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பொருத்தமான கொள்வனவுச் சபையொன்றையும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழவொன்றையும் தாபிக்காமலும் திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 2,030,000 செலவில் 21,650 பழ மரங்களை மாவட்டச் செயலகம் கொள்வனவு செய்திருந்தது. நிதிப்பிரமாணம் 237(ஆ) இன் படி பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டனவா என்பதனை உறுதிப்படுத்துவதற்கு சான்றிதழொன்று காணப்படாத போதிலும் ரூபா 2,030,000 தொகை அதற்காகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2006 இன் கொள்வனவு வழிகாட்டலின் 2.14.1 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணமாக ஐந்து கூறுவிலைகளிற்குப் பதிலாக மூன்று கூறுவிலைகளின் அடிப்படையில் மன்னார் பிரதேச செயலகம் தேசிய இளைஞர் சேவைகள் நிலையத்திற்காக ரூபா 970,000 தொகைக்கு விளையாட்டுப் பொருட்களை கொள்வனவு செய்திருந்தது.

## 1.11 நட்டங்களும் சேதங்களும்

மாவட்டச் செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கின் படி, 04 சந்தர்ப்பங்களுடன் தொடர்புடைய ரூபா 2,760,000 தொகையான நட்டங்களும் சேதங்களும் 10 ஆண்டுகளிற்கும் மேலாக காணப்பட்டு வருவதுடன் இது தொடர்பில் நிதிப்பிரமாணம் 104 மற்றும் 113 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.12 மனித வளங்கள் முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 21 | 16 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 35 | 11 | 24 |
| (iii) | இரண்டாம் நிலை | 317 | 224 | 93 |
| (iv) | ஆரம்ப நிலை | 53 | 35 | 18 |
| (v) | ஏனையோர் (அமைய) | - | 20 | - |
| | மொத்தம் | 426 | 306 | 140 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான 140 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாவட்டச் செயலகம் தவறியிருந்தது.

(ii) ஆட்சேர்க்கப்பட்டிருந்த அமைய மற்றும் தற்காலிக பதவியணியினருக்காக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.